# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 52 — 1973 මාර්තු 23 වැනි සිකුරාදා — 1973.03.23

52 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 305 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 308 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மேடை நிறுவை யந்திரங்களை வழங்குவதற்கு உள்ளூர்த் தயாரிப்பாளர்களிடமிருந்து கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச்சபைத் தலைவர் 1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

| விவரணம் | தொகை |
|---|---|
| (அ) 250 கிலோகிராம் வரை நிறுக்கக் கூடிய மேடை நிறுவை யந்திரம் ... | 31 |
| (ஆ) 500 கிலோகிராம் வரை நிறுக்கக் கூடிய மேடை நிறுவை யந்திரம் ... | 2 |

2. எல்லா விலைக்குறிப்புக்களும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியை 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ந் திகதி காலை 10 மணிக்கோ அதன் முன்போ சென்றடைதல் வேண்டும்.

3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேடை நிறுவை யந்திரத்துக்கான விலைக்குறிப்பு" என எழுதப்பட வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர் இல. 3/1-(3/36),
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.3.10.

3-909—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### சிறு கைத்தொழில் திணைக்களம்

பட்டு - ஒகன்சய்ன் நூல் வழங்குவதற்குரிய கேள்விப் பத்திரங்களைத் தயாரிப்பவர்கள் அல்லது தயாரிப்பவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து 1973.5.3 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழில் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்விப்பத்திரப் படிவங்கட்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் அதிபர்.

தொடர் இல. 3/1 (2/17),
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.03.12.

3-912—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### முக்கிய அறிவித்தல்

**ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) யிலும் (II ஆ) யிலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

எச். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.

சிறு கைத்தொழில் இலாகா

குருநாகல தாம்பிரிக்கும் நிலையத்தில் கிணறு கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள், தலைவர், கேள்விப்பத்திர சபை, சிறு கைத் தொழில் இலாகா, அவர்களால் 1973.4.9 ந் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்க இலாகாவில் கட்டிட வேலைக்கென ரூபா. 15,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 25/- ஐ வைப்புப் பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் பதிவேட்டையும் காண்பித்து 1973.4.8 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதிர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. 3/1-(1/38).
சிறு கைத்தொழில் இலாகா,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.03.10.

3-911—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

காட்டுத் திணைக்களத்திற்கான கட்டடங்கள் அமைத்தல்

பின்வரும் கட்டடங்கள் அமைப்பதற்கான கேள்விகளை 1973, ஏப்ரல் மாதம் 10 ம் திகதி மு.ப. 10 மணி வரை த.பெ இல. 509, கொழும்பு 2, என்ற முகவரியிலுள்ள காடுபேணலதிபர் ஏற்றுக் கொள்வார்.

1. வீச்சிடக் காட்டு உத்தியோகத்தர் குடிமனை — கபறணை
2. வீச்சிடக் காட்டு உத்தியோகத்தர் குடிமனை — கம்புறுப்பிட்டியா
3. காட்டுக் காவலர் குடிமனை — கசலக (கண்டி)
4. காட்டுக் காவலர் குடிமனை — கலுபகன (அப்புத் தளை)

2. கியூரோட், கொழும்பு 2. என்ற முகவரியிலுள்ள காடுபேணலதிபர் அலுவலகத்தில், 11 ம் இலக்க அறையில் சி. உ. வ. பே. திரு. எல். சீ. ஏ. த எஸ். விஜேசிங்க அவர்களிடமிருந்து பெறப்படும் படிவத்தில் இரட்டை பிரதிகளிலான கேள்விகள் காடுபேணலதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விகளுக்கான பெட்டியிற் போடப்பட வேண்டும். அல்லது காடுபேணலதிபர், கியூரோட், கொழும்பு 2 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கேள்விப் பத்திரம் வழங்குவதற்கு மீளப் பெறத்தக்க பிணைப் பணமாக ரூபா 100/- ஐ கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியில் காடுபேணலதிபர் கணக்கு இல. 34 ல் வரவு வைக்கப் பட்டதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 1973.04.09 ந் திகதி பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். ஒவ்வொரு விடயங்களுக்கும் வெவ்வேறு கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

3. மாதிரிப்படம் பொருள் மதிப்பீட்டுப் பட்டியல் அடங்கலான மேலதிக விபரங்களை, கியூரோட், கொழும்பு 2 ல் உள்ள காடுபேணலதிபர் அலுவலகத்தில் அல்லது திருகோணமலை, காலி, நுவரெலியா ஆகிய இடங்களில் உள்ள பகுதிக்காட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எல். சீ. ஏ. த எஸ். விஜேசிங்க,
காடுபேணலதிபருக்காக.

காடுபேணலதிபர் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கியூ ரோட்,
கொழும்பு 2.

3-873—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

கமத்தொழில் திணைக்களம்

அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாம்பழங்கள் விநியோகித்தல், பாரம் கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 6.4.1973 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரையும் கமத் தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பண்ணையின் பெயர் | பழங்களின் தொகை | ஒவ்வொரு கிழமையிலும் வினியோகிக்க வேண்டிய பழங்களின் தொகை |
|---|---|---|
| தின்னவேலி கமத்தொழிற் பாடசாலை | 50,000 | 10,000 |
| கிளிநொச்சி கமத்தொழிற் பண்ணை | 2,000 | 1,000 |
| வவுனியா கமத்தொழிற் பண்ணை | 8,000 | 3,000 |
| முருங்கன் கமத்தொழிற் பண்ணை | 12,000 | 4,000 |
| திருகோணமலை கமத்தொழிற் பண்ணை | 15,000 | 5,000 |
| சம்மாந்துறை கமத்தொழிற் பண்ணை | 15,000 | 5,000 |
| இங்கினியாகலை பூங்கனிப் பண்ணை | 10,000 | 4,000 |

வினியோகித்தல் பாரம் கொடுத்தல் 1973 ஆம் ஆண்டு எப்பிறல் மாதம் நான்காவது கிழமையில் ஆரம்பித்து 1973 ஆம் ஆண்டு யூன் கடைசிக் கிழமை முடிவடைதல் வேண்டும். பழுதடையாத விதைகளுக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அறவிடும் தொகையே குறிப்பிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களினும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 25 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழில் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப் படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களினும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப் படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக, எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப் படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாண கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும்

திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக் காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப் பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக் காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெருது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழி கோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினுல் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினுல் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எச். ஈ. நாணயக்கார,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வ. ம.ப)

பேராதனை.

3-872—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### சுகாதாரத் திணைக்களம்-மலேரியாத் தடுப்பு இயக்கம்

### மிதிவண்டிகளுக்கான, "டைனமோ" க்களையும், விளக்குகளையும், கருவிப்பைகளையும், பிறவும் வாங்குவதற்கான கேள்விப் பத்திரம்

கொழும்பு 5, நாரஹென்பிட்டி மலேரியாத் தடுப்பு இயக்க அலுவலகத்திலுள்ள மிதிவண்டிகளுக்கான டைனமோக்களையும், விளக்குகளையும். கருவிப்பைகளையும், பிறவும் வாங்குவதற்கான மெழுகிட்டு அடைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி வரை மலேரியாத் தடுப்பு இயக்க கண்காணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். மலேரியாத் தடுப்பு இயக்க அலுவலக உதவியாளருடன் ஒழுங்கு செய்து அலுவலக நேரங்களில் அவற்றைப் பார்வையிடலாம்.

2. மலேரியாத் தடுப்பு இயக்க கண்காணிப்பாளரின் வரவுக் கணக்கில் ஒரு கச்சேரியில் (கொழும்புக் கச்சேரி நீங்கலாக) அல்லது கொழும்பு "யோக்" வீதியிலுள்ள இலங்கை வங்கியில் (கணக்கு எண் 141) அல்லது எனது அலுவலகத்தில் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 50 ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் 1973 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிவரை மலேரியாத் தடுப்பு இயக்க கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இரு பிரதிகளில் கேள்விகளை நிரப்பல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபுற மேல் மூலையில் " மிதிவண்டிகளுக்கான டைனமோக்களையும், விளக்குகளையும், கருவிப்பைகளையும், பிறவும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரம் " எனவும், கீழ் மூலையில் கேள்விக்காரரின் பெயரும் விலாசமும் குறிப்பிட்டு, கண்காணிப்பாளர், மலேரியாத் தடுப்பு இயக்கம், தபாற் பெட்டி இல. 1472, கொழும்பு 5 என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இவ் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடவேண்டும்.

4. மேலே முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள திகதியன்று உரிய நேரம் முடிந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரரின் பெயர்களும் கேள்வித் தொகைகளும் வாசிக்கப்படும்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விக்காரர்களுக்கு அவர்களின் கேள்வி ஒத்துக்கொள்ளப்பட்டவிடயம் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்திப் பொருட்களனைத்தையும் எடுத்துச் செல்லத் தவறினுல் எவ்வித கோரிக்கைகளுக்கும் இடமின்றி கேள்விப்பத்திரக் கட்டுப் பணம் பறிமுதலாக்கப்படும்.

6. எந்த ஒரு கேள்வியை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கவோ மலேரியாத் தடுப்பு இயக்க கண்காணிப்பாளருக்கு உரிமையுண்டு.

எஸ். அன்ரனிப்பிள்ளை,
கண்காணிப்பாளருக்காக,
மலேரியாத் தடுப்பு இயக்கம்.

கண்காணிப்பாளர் அலுவலகம்,
மலேரியாத் தடுப்பு இயக்கம்,
நாரஹென்பிட்டி,
கொழும்பு 5,
1973 ஆம் ஆண்டு பங்குனி மீ

3-837—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

### இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதி

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதிக்குத் தேவையான கீழ்க் காணும் இனத்தொகுதிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங் களை புகையிரதப் பகுதி தலைமைக் காரியாலயத் தலைவர், விண்ணப் பச்சபை (தபால் விலாசம் :—பிரதம தலைமையாளர் காரியாலயம், தபால் பெட்டி 355, கொழும்பு 10) என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி, புதன்கிழமை காலை 11.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கும்படி கேட்கப் படுகின்றனர்.

2. விண்ணப்பம் செய்ய விரும்புவோர் விண்ணப்பம் செய்வதற் குமுன், தங்களால் இச்சேவையைச் சரிவரச் செய்ய முடியும் என் பதற்குரிய ஆதாரப் பத்திரங்களையும் பொருளாதார நிலையைக் குறிக்கும் பத்திரங்களையும், தேவையாயின், கொடுக்கவேண்டும்.

3. புகையிரத பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலயம், தபால் பெட்டி 1347, கொழும்பு 10 இல் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று இரண்டு பிரதிகளில் தங்கள் விண்ணப்பத்தை மனுச் செய் யவும்.

4. கீழ் காட்டிய இனத் தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் உரிய விண்ணப்பக் கட்டுப் பணம் ரூபா 250/- கட்டிய பற்றுச் சீட்டை ஒப்படைப்போருக்கு, 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிவரையும் விண்ணப்பப் பத் திரங்கள் வழங்கப்படும். இலங்கைப் புகையிரதப் பகுதி, மரு தானை பிரதம கணக்காளர் கந்தோரில் அல்லது கொழும்பு வெளிப் பகுதிக் கச்சேரிகளில் விண்ணப்பக் கட்டுப்பணத்தைக் கட்டலாம்.

5. 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி புதன் கிழமை பகல் 11.05 மணிக்கு. இலங்கைப் புகையிரத அதிபர் காரி யாலயத்தில், விண்ணப்பப் பத்திரங்களை உடைக்கும் பொழுது விண்ணப்பம் செய்தோர் சமூகம் அளிக்கலாம்.

6. புகையிரத பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலயத்தில் மற் றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இனத் தொகுதிகள் :—

(1) நிறப் பூச்சுகள்
(2) துவிச்சக்கரவண்டி உதிரிப் பாகங்கள்
(3) நெருப்பணைக்கும் கருவிகள்
(4) வீட்டுத்தளபாடங்களும், சுத்திகரிக்கும் பொருட்களும்
(5) மருந்து வகைகள்
(6) தோல் பொருட்கள்
(7) விளக்குத் திரிகள்
(8) இரப்பர் பொருட்கள்
(9) பி. வீ. சி. குழாய்களும் இணைப்புகளும்
(10) பி. ஆர். சீ. பவ்றிக் (Fabrics)
(11) நாகம் பூசிய இரும்புப் பொருட்கள்
(12) பித்தளைப் பொருட்கள்
(13) பித்தளை, உருக்கு பிணைச்சல்கள்
(14) கல்நார் தகடுகள்
(15) பல்புகளும், டாச் விளக்குகளும்
(16) கயிற்றுப் பொருட்கள்
(17) பிரஸ்களும், துடைப்பங்களும்
(18) அரத் தாள்கள்
(19) பருத்திப் பொருட்கள் (தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள், துவாய்கள், பனியன்கள்)
(20) எழுது கருவிகள்
(21) நீர்புகாச் சட்டைகள்
(22) பருத்தி நூலும், டுவைனும்
(23) அச்சாணியுஞ் சுரையும்
(24) கம்பி ஆணிகள்
(25) பித்தளை, இரும்பு, மர திருகாணிகள்
(26) மேலணைத்துணிகள்
(27) இரும்புப் பொருட்கள்
(28) வீட்டுபயோகப் பொருட்கள்.

எம். சறீன்,
தலைமை அதிபருக்காக,
இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி.

கொழும்பு,
12.3.1973.

3-926—23-03-73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆந் தேதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிவரையான 19 மாத காலத் தில் தயர்களை மீளத்தவாளித்தல் செய்வதற்கான பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை, 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆந் தேதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளு வார்.

கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக 100/- ரூபாவையும் மீளளிக் படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக 25/- ரூபாவையும் காசாகக் கட்டுவதின்பேரில், 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 தேதி வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிவரை, கேள்விப்பத்திரங் களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முழு விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள லாம்.

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வெரகெரை,
பொரலஸ்கமுவை.

3—932—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

## ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### காரைநகர்-ஊர்காவற்றுறை ஆய சேவை

### 1973 ம் ஆண்டு ஏப்பிறல் 1 ம் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு டிசம்பர் 31 வரை

1973 ம் ஆண்டு ஏப்பிறல் 1 ம் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி கால எல்லைவரை காரைநகர்-ஊர் காவற்றுறை ஆய சேவைக்கான குத்தகைக் கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ந் திகதி காலை 10 மணி வரைக் கும் யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகளுக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 100/- கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரங்கள் இரு பிரதியில் இருக்க வேண்டும். வெற்றி பெற்ற குத்தகைக்காரர் உரிய காலத்திற்குள் பிணைப்பணத்தைக் கட்டத்தவறினால் அல்லது ஒப்பந்தத்தை கைச்சாத்திடத் தவறி னல் முன்கட்டிய பணத்தை இழக்க வேண்டியும் அவருடைய பெயர் தவறுனர் உத்தரவுச் சீட்டு நிரலில் சேர்க்கப்பட்டுவிடும். இவற்றைத் தவிர்ந்து, ஏனைய கேள்வியாளரின் கட்டுப்பணம் வெற் றிபெற்ற விற்பனையாளர் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டு பிணைப்பணம் கட்டியபின்பு திருப்பிக் கொடுக்கப்படும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் பொறியிட்ட காகித உறைக் குள் வைக்கப்பட்டு 1973 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ந் திகதி காலை 10 மணிக்குமுன் எனது காரியாலய உதவியாளரிடம் யாழ்ப் பாணக் கச்சேரியில் நேரில் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலய உதவியாளரின் அலு வலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்கள் சமூக மளிக்கலாம்.

5. மேற்கூறப்பட்ட நாள் நேரத்துக்குப் பிந்திக்கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. கேள்வியாளர்கள் இச்சேவையை நடத்துவதற்கென விதிமுறைகளை யாழ்ப்பாணக் கச்சேரியில் பார்வையிடலாம். காரைநகர் துறையிலிருந்து ஊர்காவற்றுறைக்கு நேராகச் செல்பவர் தவிர்ந்த மற்றையவர்களிடம் ஆயக்குத்தகை அறவிடமுடியாது.

7. நியமனம் பெற்ற கேள்வியாளர் கேள்வித்தொகையில் பத்தில் ஒரு பங்கை முற்பணமாக உடனே செலுத்தவேண்டும். கேள்வித் தொகையில் அரைவாசியைக் காணிப் பிணையாகவும் அல்லது மூன்றில் ஒரு பங்கை காசுப் பிணையாகவும் கேள்விகள் ஏற்றுக்கொண்ட 10 நாட்களுக்குள் பிணைப்பணமாகச் செலுத்தவேண்டும்.

8. நியமனம் பெற்ற கேள்வியாளர் தாங்கள் பிணையாகக் கொடுக்கும் காணிகளின் உறுதிகளைப் பார்வையிடுதல் உறுதிச் சீட்டு வரைதல் காணிகள் மதிப்பிடுதல் உறுதிச்சீட்டுப்பத்திரத்துக்குரிய மூத்திரைச்சட்டத்தின் கீழ் நிர்மாணித்தல் முதலிய வேலைகளுக்கு முடிக்குரிய பிரக்கிராசியாருக்கு கொடுக்க வேண்டிய போதிய பணத்தையும் செலுத்தவேண்டும்.

9. பிணையாகக் கொடுக்கும் ஒவ்வொரு உறுதிகளுடனும் அக்காணிகளில் வில்லங்கம் அல்லது கடன் எதுவும் இல்லையென்று உறுதிப்படுத்தும் காணிப்பதிவாளரின் பத்திரம் இணைக்கவேண்டும். பிணை கட்டுபவரே மேற்கூறிய பத்திரம் பெற்றுக் கொள்வதற்குரிய செலவும் கொடுக்க வேண்டும்.

10. கேள்விகள் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது கிடைத்த கேள்விகள் திருப்திகரமாக இல்லாவிட்டால் ஆயக்குத்தகை கேள்விப்பத்திரங்கள் திறந்த அன்றே ஏல விற்பனைக்கு விடப்படும்.

11. அரசாங்க அதிபர் எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாவற்றையுமோ எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

12. நியமனம் பெற்ற கேள்வியாளர் இலங்கைத் தொழிலாளர்களையே வேலைக்கு அமர்த்துதல் வேண்டும்.

13. ஆயக்குத்தகை நடாத்துபவர் இலங்கைத் தொழிலாளர்களையே அமர்த்த வேண்டும். இது ஆயக்குத்தகை விதிமுறைகளில் ஒன்றாக இருக்கும். இந்த விதியை மீறும் நியமனம் பெற்ற கேள்வியாளர் ஆயக்குத்தகை உரிமையை இழக்கவேண்டி நேரிடும். திறைசேரியின் அனுமதியுடன் அரசாங்க அதிபர் இலங்கையர் அல்லாதாரை குறிப்பிட்ட காரணங்களுக்காக வேலைக்கு அமர்த்த எழுத்து மூலம் அனுமதி பெறாமல் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்தக்கூடாது.

14. இன்னும் மேற்கொண்டு விபரங்களை வேண்டுவோர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஏ. ஜோசப்,
மேலதிக யாழ்ப்பாண மாவட்ட
அரசாங்க அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1973.2.23.

3-807—23-03-73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

*முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.*

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாச்சு | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | . | 28.2.73 | புதன் | | ந.ப. 12.00 |
| | | 16.3.73 | வெள்ளி | . | 7.3.73 | புதன் | | ந.ப. 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | . | 14.3.73 | புதன் | . | ந.ப. 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21.3 73 | புதன் | | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

*ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*